பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 27 சனிக்கிழமை 13.11.2021 கதிர் 236

## முன்னாள் நகர சபைத் தலைவர் கொரோனாத் தொற்றால் சாவு!

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முன்னாள் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

தேவசகாயம்பிள்ளை, 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சாவகச்சேரி நகர சபைக்குப் போட்டியிட்டு அதிகூடிய ☞2

# 2 வருடங்களுக்குப் பின்னர் யாழ். மண்ணில் களைகட்டிய பாடசாலைக் கிரிக்கெட் போட்டி

## யாழ். இந்து - கொழும்பு றோயல் அணிகள் மோதல்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி அணிகள் மோதிய 19 வயதுக் குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட சிநேக பூர்வ அழைப்பு கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மேம்படுத்தப்பட்ட மைதானத்தில் இன்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் ☞2



# இலங்கையில் மற்றுமொரு கொரோனாக் கொத்தணி!

## - வைத்தியர் சங்கம் அபாய எச்சரிக்கை

### தடுப்பதற்கான பரிந்துரை அடங்கிய கடிதம் ஜனாதிபதிக்கு அவசரமாக அனுப்பிவைப்பு



நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப்பட்டதன் காரணமாக மிக விரைவில் மேலுமொரு கொரோனா அலை உருவாகுவதற்கான அபாய நிலை உருவாகியுள்ளது என இலங்கை வைத்தியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதைத் தடுப்பதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கிய கடிதம் அந்தச் சங்கத்தால் ஜனாதிபதி கோட்டாபய ☞2

## மூச்சுத் திணறலால் உயிரிழந்தவருக்கு கொரோனா உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்த குடும்பஸ்தருக்குக் கொரோனா நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, அராலி மேற்கைச் சேர்ந்த 34 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை நேற்று உயிரிழந்தார்.

அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா நோய்த்தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு கடந்த சில நாள்களாகத் தடிமன் மற்றும் காய்ச்சல் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக ☞2

## வவுனியாவில் 10 மாணவர்கள் கொரோனாவுடன் அடையாளம்

(வவுனியா நிருபர்)

வவுனியா வடக்கு வலய பாடசாலை ஒன்றில் 10 மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு வலயத்துக்குட்பட்ட மறவன்குளம் பாரதி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 5 மாணவனுக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் குறித்த மாணவனுக்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் ☞2


## மீண்டும் முடக்கப்படுமா நாடு? மக்கள் கைகளிலேயே முடிவு

### சுகாதார அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொரோனா நோயைக் கட்டுப்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. அதனைத் தொடர்ந்தும் முடிந்தவரை முன்னெடுப்போம் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா நோயைக் கட்டுப்படுத்த அரசு மிக உயர்ந்த நடவடிக்கைகளை எடுக்கும்போது மக்கள் தங்களின் உயரிய பங்களிப்பை வழங்க வேண்டும். ☞2



## மாமியாரின் மண்டையை உடைத்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்

### திருமலையில் வெறியாட்டம்

மாமியாரைத் தாக்கிய மருமகன் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை, கோமரங்கடவல - அடம்பன பகுதியைச்சேர்ந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

மேற்படி சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒரே வீட்டில் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் மாமி (மனைவியின் தாய்) ஆகியோருடன் வசித்து வந்துள்ளார். ☞2



## யாழ். தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் ☞2

## வவுனியாவில் ஓட்டோ சாரதி மீது இராணுவத்தினர் கடும் தாக்குதல்

### பொதுமக்கள் முற்றுகையால் பதற்றம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஓட்டோ சாரதி ஒருவர் மீது இராணுவத்தினர் கடும் தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவித்து இராணுவ வாகனம் பொதுமக்களால் முற்றுகையிடப்பட்டது. ☞2

## மாமியாரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு மதுபோதையில் வந்து மனைவியைத் தாக்கியபோது மாமியார் குறுக்கே வந்து மருமகனைத் தடுக்க முற்பட்டுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த மருமகன் தனது மாமியாரைத் தடியால் தாக்கியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மருமகனின் தாக்குதலில் மாமியாரின் மண்டை உடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து மருமகன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் கோமரங்கடவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 2 வருடங்களுக்குப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட கொழும்பு றோயல் கல்லூரி அணி 30 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 30 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக உமுது வீரசேகரவும், வளர்ந்து வரும் வீரராக மல்லவராய்ச்சியும் கொழும்பு றோயல் கல்லூரியில் இருந்து தெரிவாகினர்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக 27 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பெற்ற தரணிதரனும் சிறந்த பந்துவீச்சாளராக கஜநாத்தும் சிறந்த களத்தடுப்பாளராக கோமைந்தனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து தெரிவுசெய்யப்பட்டனர்.

நவீன வசதிகளுடன் புதிதாக மேம்படுத்தப்பட்டு நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் தற்போதைய சட்டம் மற்றும் வரையறைகளைக் கடுமையாக்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் பரிந்துரைத்துள்ளது.

அதன்போது சுகாதார நடைமுறைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை முழுமையாகக் கண்காணித்தல் மற்றும் சான்றுப்படுத்தல் கட்டாயமானது என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று முக்கிய தரப்பினருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியைச் செலுத்துவது அவசியம் என்றும், கொரோனாத் தொற்று பரவலடையும் எச்சரிக்கை தன்மையை தற்போதைய நிலையில் கவனத்தில் கொள்ள வேண்டிய கட்டாயம் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், மறுவாழ்வாக்கப்பட வேண்டிய 60 வயதுக்குக் குறைவான நோயாளர்கள் மற்றும் சகல சுகாதார சேவையாளர்களுக்கும் மூன்றாம் கட்டமாக பைஸர் தடுப்பூசி வழங்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டடங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், மரணச் சடங்குகள், இசை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையை வரையறுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மூச்சுத் திணறலால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கானை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா நோய்த் தொற்று இல்லை என வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டார்.

இந்தநிலையில், நேற்றுக் காலை ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக அவர் வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தில் பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில் அவருக்குக் கொரோனா நோய்த்தொற்றுள்ளமை இன்று மாலை உறுதிப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் 10 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இதையடுத்து குறித்த மாணவனுடன் தொடர்புடைய ஏனைய மாணவர்களுக்கு இன்று துரித அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரிசோதனையில் அந்தப் பாடசாலையைச் சேர்ந்த தரம் 5 மாணவர்கள் 7 பேருக்கும், தரம் 11 மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

## மீண்டும் முடக்கப்படுமா ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வழங்குகின்ற பங்களிப்புக்கமைய கொரோனாத் தொற்று பரவல் கட்டுப்படுத்தப்படும்.

கொரோனா கட்டுப்பாட்டுக்கு மக்கள் வழங்கும் பங்களிப்பைப் பொறுத்தே பயணக் கட்டுப்பாடுகள் அல்லது நாடு முடக்கம் குறித்து தீர்மானிக்கப்படும்.

மக்கள் அதற்கு எதிர்மறையாக நடந்துகொண்டால், மீண்டும் பயணக் கட்டுப்பாடு அல்லது நாட்டை முடக்குதல் போன்றதொரு சூழலை எதிர்கொள்ள நேரிடலாம்.

அத்துடன், இதுவரை வெற்றிகரமாக தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப மக்கள் வாழும் சூழலை தயார் செய்ய வேண்டும் - என்றார்.

## யாழ். தலைமையக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரியாக தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பி.எம்.சி.ஜே.பி. பளிகேன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நாளைமறுதினம் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகராகப் பதவி உயர்வு பெற்றார்.

அந்த வெற்றிடத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் பதில் கடமைக்கு அமர்த்தப்பட்டார்.

இந்தநிலையில், அரசில் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையில் புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக தலைமை பொலிஸ் பரிசோதகர் பி.எம்.சி.ஜே.பி. பளிகேன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் ஒரே நேரத்தில் பல பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவற்றில் வரலாற்றில் முதன்முறையாக பொலிஸ் மருத்துவ சேவைப் பிரிவுக்கு மருத்துவர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

நான்கு மூத்த பொலிஸ் அத்தியட்சகர்களும், 10 தலைமைப் பொலிஸ் பரிசோதகர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 15 தலைமைப் பொலிஸ் பரிசோதகர்கள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

## வவுனியாவில் ஓட்டோ .....

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ரயில் நிலைய வீதியூடாக ஓட்டோ ஒன்று பயணித்தபோது இராணுவ கப் ரக வாகனம் ஒன்றை குறித்த ஓட்டோ முந்திச் செல்ல முற்பட்டபோது இராணுவ வாகனத்தின் சாரதிக்கும், ஓட்டோ சாரதிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதுடன், ஓட்டோ இராணுவ வாகனத்தை முந்திச் சென்றுள்ளது.



இதையடுத்து வவுனியா - பண்டாரிக்குளம் வீதியில் திரும்பிய ஓட்டோவை வழிமறித்த குறித்த இராணுவ கப் ரக வாகனத்தில் இருந்த இராணுவத்தினர் ஓட்டோ சாரதி மீது கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதன் பின்னர் இராணுவ வாகனத்தைப் பின் தொடர்ந்து சென்ற ஓட்டோ சாரதி பண்டாரிக்குளம் பகுதியில் இராணுவ வாகனத்தை வழிமறித்து தன் மீது தாக்குதல் நடத்தியமைக்கான காரணத்தைக் கேட்டார். இதன்போது அப்பகுதியில் பொதுமக்கள் குவிந்ததுடன், இராணுவ வாகனத்தைச் செல்ல விடாது வழிமறித்தனர்.

அதையடுத்து அவ்விடத்துக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் இராணுவ வாகனத்தைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். சிறிது நேரத்தின் பின்னர் இராணுவ வாகனத்தைப் பொலிஸார் விடுவித்திருந்தனர்.

இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகிய ஓட்டோ சாரதி வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (100)

## முன்னாள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருப்பு வாக்குகளால் வெற்றி பெற்று தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர்ச்சியாக 4 ஆண்டுகள் சபையின் தலைவராக இருந்து பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்தார்.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சாவகச்சேரி வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நடுநடுங்குபவர்கள் யார்?

புதிய நிதி அமைச்சர் தமது கன்னி வரவு – செலவுத் திட்ட உரையை நேற்று சமர்ப்பித்து விட்டார். தற்போதைய நிகழ்கால பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப இந்த வரவு செலவுத் திட்டத்தை அவர் தயாரித்து வழங்கினாரோ என்னவோ, ஆனால் அதையொட்டி அவர் குறிப்பிட்ட அரசியல் நிலைவரம் இப்போதைய நிலைமை அல்ல. அது பழங்கதை.

ஜனாதிபதித் தேர்தலிலும் பின்னர் வந்த பொதுத் தேர்தலிலும் தங்களுக்கு கிடைத்த பெரு வெற்றியை பெரிதும் சிலாகித்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அதன்மூலம் எதிர்க்கட்சிகளை நடுநடுங்க வைத்தோம் என்று பழைய புரணி பாடியுள்ளார்.

உண்மைதான். ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் அவரை ஸ்தாபகராகக் கொண்ட பொதுஜன பெரமுன எதிர்க்கட்சிகளை நடுநடுங்க வைக்கும் வரலாற்று வெற்றியை ஈட்டியது என்பது மறுக்க முடியாத யதார்த்தம் தான். அது முறையே இரண்டு வருடங்கள் மற்றும் ஒரு வருடத்துக்கு முந்திய நிலைமை. அன்று பொதுஜன பெரமுனவைப் பார்த்து – அதன் பேரெழுச்சியை வெளிப்படுத்துகின்ற மகத்தான வெற்றியை பார்த்து – மற்றைய எதிர்க்கட்சிகள் நடுநடுங்கினவோ அல்லது மலைத்து நின்றனவோ தெரியவில்லை. ஆனால் நிதியமைச்சரின் பொதுஜன பெரமுன இன்று அத்தகைய அரசியல் உறுதி நிலையில் – ஸ்திரமான கட்டத்தில் – இல்லவே இல்லை என்பதுதான் யதார்த்த நிலைமை.

இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தங்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றிக்கு மூன்று காரணிகளை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தமது வரவு – செலவுத் திட்ட உரையில் வரிசைப்படுத்தினார்.

முதலாவது – மஹிந்த ராஜபக்ஷவின் நிகரற்ற அரசியல் தலைமைத்துவம்.

இரண்டாவது – ஒழுங்கமைக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன.

மூன்றாவது – மக்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட வெற்றிவாய்ப்பு வேட்பாளர் ஒருவர் தங்களது அரசியல் முகாமுக்குள் இருந்தமை.

உண்மைதான். இந்த மூன்றும் பஸில் ராஜபக்ஷ தரப்பிடம் அன்றுஇருந்தன. அவையேவெற்றிக்குபிரதானகாரணங்களாக அமைந்தன. ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. இந்த மூன்றும் எவ்வளவு விரைவாக – வேகமாக – மக்கள் மத்தியில் பேராதரவு அலையை திரட்டித் தந்தனவோ, அதிலும் விட வேகமாக அத்தரப்பிடமிருந்து அவை இப்போது விலகி விட்டன என்பதுதான் இன்றைய யதார்த்த நிலைமையாகும்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் தலைமைத்துவத்தை தென்னிலங்கை மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ, இன்றைய ஆட்சி கட்டமைப்பில் – அதிகார முறைமையில் – அதற்கு அல்லது அவருக்கு இடம் ஏதுமில்லை என்பது மக்களுக்கு இன்று நன்கு தெரியும். அதனால் அந்த விடயத்துக்காக இந்த அதிகார பீடத்தைத் தொடர்ந்து மெச்சுவதற்கு – வரவேற்பதற்கு – இடமில்லை என்ற முடிவுக்கு மக்கள் வந்து விட்டனர்.

அடுத்தது – பொதுஜன முன்னணியின் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு பற்றிய மக்கள் எண்ணம். அது இப்போது சந்தி சிரிக்கும் நிலைமை. ஆட்சி கட்டமைப் பின் ஒற்றுமை பற்றிய விவகாரம் நாற்றமெடுக்கும் சகதியாகியிருப்பது வெளிப்படையானது.

மூன்றாவது – வெற்றி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ பற்றிய மக்களின் எண்ணக் கருத்து. அது இப்போது பல மாதங்கள் கடந்துவிட்ட நிலைமை. ஆட்சி அதிகாரத்தை அவர் கையாளும் விதத்தைப் பார்த்து இவரை ஏன் தெரிவு செய்தோம் என்று மக்கள் தம்மைத் தாமே நொந்து கொள்ளும் பரிதாப நிலைமையே இப்போது ஏற்பட்டுள்ளது.

2019 இலும், 2020 இலும் எதிர்க்கட்சிகளை நடுநடுங்க வைக்கும் வெற்றிகளை பொதுஜன பெரமுன பெற்றதோ இல்லையோ, ஆனால் இப்போதைக்கு தேர்தல் ஒன்றை சந்திக்கும் திராணியற்று, தேர்தல் என்றாலே பதைபதைக்கும் நிலையில்தான் நிதி அமைச்சரின் தரப்பு ஆட்சியும், அவரை ஸ்தாபகராக கொண்ட முன்னணியின் கட்டமைப்பும் உள்ளன.

அதனால்தான் நிலுவையில் நிற்கும் மாகாணசபைத் தேர்தல்கள் பற்றியோ அல்லது அடுத்த ஆண்டில் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்தோ, அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றியோ மூச்சுவிடாமல், தேர்தல் விவகாரத்தைத் தமது உரையில் மூடு மந்திரமாக வைத்திருக்கின்றார் நிதியமைச்சர்.

# எரிபொருள் விலை சூத்திரம் அத்தியாவசியமான ஒன்று

## இலங்கை மத்திய வங்கி தெரிவிப்பு

அரச வங்கி கட்டமைப்பின் ஸ்திரத்தன்மைக்காக எரிபொருள் விலை சூத்திரம் அத்தியாவசியமானது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

விலை அதிகரிப்புக்கு அமைய மற்றும் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கலாம் என்ற முன்னறிவிப்பு காரணமாக ஏற்படும் எரிபொருள் நெருக்கடிக்கு விலை சூத்திரம் மாத்திரம் போதுமானதாக இருக்காது எனவும் மத்திய வங்கி கூறியுள்ளது.

அண்மைய கால பொருளாதார செழிப்பு என்ற பெயரில் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் இலங்கை மத்திய வங்கி இதனைக் கூறியுள்ளது.

விலை சூத்திரத்தின் ஊடாக எரிபொருள் விலையை நிர்ணயிப்பதன் மூலம் எரிபொருள் விலைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் இருக்கும் வரவேற்பை முன்னேற்ற முடியும். அத்துடன் விலை அதிகரிப்புகள் தொடர்பான செயற்பாடுகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்க முடியும் எனவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அதனைத் தவிர உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் குறையும் போது அதன் பிரதிபலனை உடனடியாக நுகர்வோர் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எது எப்படி இருந்த போதிலும் எரிபொருள் விலைகள் சர்வதேச சந்தையில் ஏற்றம், இறக்கம் காணும் போது, அதனடிப்படையில் இலங்கையில் எரிபொருளின் விலைகளை நிர்ணயிப்பதற்காகக் கடந்த நல்லாட்சி அரசாங்கம் இதே விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தியது.

எனினும் அன்றைய எதிர்க்கட்சியான தற்போதைய ஆளும் கட்சியினர் அதனைக் கடுமையாக விமர்சித்தனர். உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போது, இலங்கையில் அதன் விலை அதிகரிக்கப்படுமாயின் நாட்டில் அரசாங்கம் ஒன்று எதற்கு என விமல் வீரவன்ஸ உள்ளிட்ட அன்றைய எதிரணியினர் கேள்வி எழுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் 11 நாள்களில் 240 கொவிட் தொற்றாளர்!

## பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் தகவல்

மன்னார் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை மேலும் 50 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் கடந்த 11 நாள்களில் மன்னார் மாவட்டத்தில் 240 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் வியாழக்கிழமை மேலும் புதிதாக 50 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 45 தொற்றாளர்கள் அன்டிஜன் பரிசோதனைகள் மூலமாகவும் 5 தொற்றாளர்கள் பி.சி.ஆர். பரிசோதனை மூலமாகவும் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 9 தொற்றாளர்கள் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலும், 8 தொற்றாளர்கள் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலும், மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் அடம்பன் வைத்தியசாலைகளில் தலா 6 தொற்றாளர்களும், நானாட்டான் வைத்தியசாலையில் 5 தொற்றாளர்களும், வங்காலை வைத்தியசாலையில் 4 தொற்றாளர்களும், முருங்கன், பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் விடத்தல்தீவு ஆகிய வைத்தியசாலைகளில் தலா 2 தொற்றாளர்களும், தலைமன்னார் வைத்தியசாலையில் ஒரு தொற்றாளரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் 11 நாள்களில் 240 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சராசரியாக 21 பேர் நாள் ஒன்றுக்கு மன்னாரில் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் மொத்தம் 2 ஆயிரத்து 618 கொவிட் தொற்றாளர்களும், தற்போது வரை 2 ஆயிரத்து 635 கொவிட் தொற்றாளர்களும் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் மேலும் 2 கொவிட் தொற்றாளர்கள் மரணித்துள்ளனர். இது வரை மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 25 கொவிட் தொற்றாளர்களின் மரணங்கள் பதிவாகி உள்ளன.

கொவிட் மரண வீதம் மன்னார் மாவட்டத்தில் 0.95 ஆக காணப்படுகின்றது. இதே வேளை, கொவிட் தொற்று அதிகரிப்புக்குப் பிரதான காரணமாக மக்கள் அதிகமாக வெளியில் நடமாடுவது சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது செயற்படுவது மற்றும் ஒன்று கூடல் நிகழ்வுகளில் குறிப்பிடப்பட்ட ஆளணிகளுக்கு மேலாக இணைந்திருப்பதும் ஒரு காரணமாக இருக்கிறது.

மேலும் தற்பொழுது மன்னாரிலுள்ள காலநிலை வைரஸ் பரவுவதற்கு ஏற்ற சூழ்நிலையாகக் காணப்படுவதால் மக்கள் கட்டாயம் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து நடக்க வேண்டும்.

அதேவேளை, நிகழ்வுகளை ஒழுங்கு செய்பவர்கள் சுகாதார அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றே நிகழ்வுகளை ஒழுங்கு செய்யவேண்டிய நிலை உருவாகியிருக்கின்றது. அத்தோடு இரண்டு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டவர்கள் மாத்திரமே எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வியாபார நிலையங்கள், சந்தைகள், பொதுப் போக்குவரத்து வாகன சேவைகள் ஆகியவற்றில் நடத்திச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

அத்துடன் தற்பொழுதுள்ள காலநிலை மழைவீழ்ச்சி காரணமாக டெங்கு தொற்று நோய் பரவும் அபாயம் மன்னார் மாவட்டத் தில் உருவாகியுள்ளது. குறிப்பாக வீடுகள் மற் றும் வீட்டுச் சூழல் உள்ள இடங்களில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகிறது.

ஆகவே மக்கள் இந்த விடயத்திலும் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றனர். நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை இனம் கண்டு உடன் அவற்றை இல்லாது ஒழித்து நுளம்புத் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மன்னார் மாவட்டத்தில் இதுவரை 89 சதவீதமானோர் முதலாவது தடுப்பூசிகளையும் 71.9 சதவீதமானோர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுள்ளனர்.

இதனைத் தவிர மொத்தமாக 5 ஆயிரத்து 573 பாடசாலை மாணவர்களுக்கும் 492 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளன. 768 பேருக்குப் பாடசாலையிலிருந்து இடைவிலகியவருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஸி ஜின்பிங் சீன ஜனாதிபதியாக தொடர கம்யூனிஸ்ட் மத்திய குழு ஒப்புதல்

சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக பதவியில் தொடர வழிசெய்யும் தீர்மானத்துக்கு, சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் அதிகாரம் படைத்த மத்திய குழு ஒப்புதல் அளித்துள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100 ஆண்டுகால வரலாற்றில், கட்சியின் நிறுவனர் மாவோ சேதுங் மற்றும் அவருக்குப் பிறகு ஜனாதிபதி டெங் ஜியோபிங் ஆகியோருக்குப் பிறகு மூன்றாவது முறையாக இத்தகைய தீர்மானத்துக்கு அக் கட்சியின் மத்திய குழு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்மூலம், ஷி ஜின்பிங் மேலும் 5 ஆண்டுகள் சீன ஜனாதிபதியாக தொடருவது பெரும்பாலும் உறுதியாகியுள்ளது.

சீனாவில் இதற்கு முந்தைய ஜனாதிபதி அனைவரும் 2 முறை ஆட்சி செலுத்தியதற்குப் பிறகோ, தங்களுக்கு 68 வயது பூர்த்தியான பிறகோ பதவியிலிருந்து ராஜினாமா செய்து வந்தனர்.

இந்தச் சூழலில், கடந்த 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியல் சாசனத் திருத்தத்தில், ஒருவர் இரு முறை மட்டுமே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்ற வரம்பு நீக்கப்பட்டது.

இது, ஸி ஜின்பிங்கின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கான முன்னேற்பாடாகக் கருதப்பட்டது. 2012ஆம் ஆண்4டு ஜனாதிபதியாக பதவியேற்ற ஸி ஜின்பிங்கின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிகிறது. எனினும் இப்போதுள்ள சர்வதேச சூழ்நிலையில், ஜின்பிங்கே ஜனாதிபதியாக தொடர, சீன கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. ஸி ஜின்பிங், சீன கம்யூனிஸ்ட் கட்சி, மத்திய இராணுவ ஆணையம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பையும் முப்படைகளைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதி பொறுப்பையும் வகித்து வருகிறார். இதன் மூலம், நாட்டின் 3 அதிகார பீடங்களும் அவரது கட்டுப்பாட்டில் உள்ளன.



# அமெரிக்க ஊடகவியலாளருக்கு மியன்மாரில் 11 ஆண்டுகள் சிறை



அமெரிக்க ஊடகவியலாளர் டேனி பென்ஸ்டருக்கு, மியன்மார் இராணுவ நீதிமன்றம் 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

பென்ஸ்டர், குடியேற்றச் சட்டத்தை மீறியதற்காகவும், சட்ட விரோதமான தொடர்பு மற்றும் இராணுவத்திற்கு எதிரான எதிர்ப்பை ஊக்குவித்ததற்காகவும் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார்.

இந்த வார தொடக்கத்தில் அவர் மீது தேசத்துரோகம் மற்றும் பயங்கரவாதம் ஆகிய இரண்டு கூடுதல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அவரது புதிய குற்றச்சாட்டுகள் மீதான விசாரணை எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி தொடங்கவுள்ளது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம்.

பிராண்டியர் மியன்மார் ஒன்லைன் தளத்தின் நிர்வாக ஆசிரியராக இருந்த 37வயதான பென்ஸ்டர், மே மாதம் யாங்கூன் சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார்.

பெப்ரவரியில் இராணுவ சதிப்புரட்சிக்குப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டுள்ள டஸின் கணக்கான உள்ளூர் ஊடகவியலாளர்களில் இவரும் ஒருவர்.

பிராண்டியரின் கூற்றுப்படி, பென்ஸ்டர் இதற்கு முன்னர் மியன்மார் நவ் என்ற ஒரு சுயாதீன செய்தித் தளத்தில் பணியாற்றினார். இது ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பின்னர் இராணுவத்தை விமர்சித்துள்ளது.

மியன்மார் நவ் என்ற தடைசெய்யப்பட்ட ஊடகத்தில் அவர் பணியாற்றுகிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அமைந்தன. டேனி 2020ஆம் ஆண்டு ஜூலை யில் மியன்மார் நவ்வில் இருந்து இராஜினாமா செய்து அடுத்த மாதமே பிரான்டியரில் சேர்ந்தார்.

ஜப்பானிய பகுதிநேர ஊடகவியலாளர் ஒருவர் மியன்மாரில் கைது செய்யப்பட்டு போலிச் செய்திகளைப் பரப்பினார் எனக் குற்றம் சாட்டப்பட்டு சில மாதங்களுக்குப் பிறகு வெள்ளிக்கிழமை அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

யூகி கிடாசுமி என்ற குறித்த ஊடகவியலாளர், ஜப்பானின் பல முக்கிய செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கை அளித்து வந்தவர்.

மியன்மாரில் உள்ள சில வெளிநாட்டு நிருபர்களில் ஒருவர். அவர் சட்டத்தை மீறினார் என மியன்மார் அதிகாரிகள் கூறுகின்றனர், ஆனால், அவரை ஜப்பான் விடுதலை செய்ய கோரியதால் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

# மேக்ஸ் விமான விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்க போயிங் நிறுவனம் சம்மதம்!

எத்தியேப்பியன் எயார்வேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான தங்களது 737 மேக்ஸ் வகை விமானம் விபத்துக்குள்ளானதால் உயிரிழந்த 157 பேரது குடும்பத்தினருக்கு, இழப்பீடு வழங்க அமெரிக்க நீதிமன்றத்தில் போயிங் நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

சிக்காகோவில் உள்ள நீதிமன்ற ஆவணங்களின்படி, அவர்களின் இறப்புக்கான பொறுப்பை விமான தயாரிப்பாளர் ஏற்றுக்கொள்கிறார்.

பதிலுக்கு, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நிறுவனத்திடம் இருந்து தண்டனைக்குரிய இழப்பீடு கோர மாட்டார்கள்.

250 கோடி அமெரிக்க டொலர் கள், அமெரிக்க நீதித்துறையுடன் அப ராதம் மற்றும் இழப்பீடாக ஜனவரி மாதம் போயிங் ஒப்புக்கொண்டது. இதில் 737 மேக்ஸ் விபத்தில் உயிரிழந்த 157பேரின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க 50 கோடி அமெரிக்க டொலர் நிதியும் அடங்கும்.

35 நாடுகளில் இருந்து விபத்துக்குள்ளான அனைத்துக் குடும்பங்களுக்கும் இந்த தொகை பகிர்ந்தளிக்கப்படும். இதுகுறித்து போயிங் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ‘விபத்துகளில் அன்புக்குரியவர்களை இழந்த அனைத்து குடும்பங்களும் முழுமையாகவும் நியாயமாகவும் இருப்பதை உறுதி செய்வதில் போயிங் உறுதி பூண்டுள்ளது’ என கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான வழக்கறிஞர்கள், போயிங் இன்னும் முழு பொறுப்பு வகிக்கும் என்று கூறினார். ஒப்பந்தத்தை ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக வரவேற்றனர்.

இந்தச் செய்தியில் போயிங் நிறுவனத்தின் பங்குகள் 1 சதவீதம் சரிந்து 218.50 டொலர்களாக இருந்தது.

2019ஆம் ஆண்டு அடிஸ் அபாபாவில் இருந்து நைரோபிக்கு புறப்பட்ட எத்தியோப்பியன் எயார்லைன்ஸ் 737 மேக்ஸ் விமானம் விபத்துக்குள்ளானது.

2018ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இந்தோனேஷியாவில் லயன் எயார் விமானம் விபத்துக்குள்ளாகி 189 பேரைக் கொன்ற ஆறு மாதங்களுக்கு பிறகு இந்த விபத்து சம்பவித்தது



# எரிவாயு விநியோகத்தை நிறுத்திவிடுவோம்; எச்சரிக்கும் பெலாரஸ்



பெலாரஸ் நாட்டின் மேற்கு எல்லைப்பகுதிகளில் தொடர்ந்து குவிந்து வரும் குடியேறிகள் தொடர்பான விவகாரத்தில், பெலாரஸ் மீது தடைகள் விதிக்கப்பட்டால், ஐரோப்பிய ஒன்றியத்துக்குச் செல்லும் எரிவாயு குழாய்களை தடுப்போம் என அந்நாட்டின் தலைவர் லுகன்ஷென்கொ எச்சரித்துள்ளார்.

ஈராக், சிரியா, ஏமன் போன்ற நாடுகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான குடியேறிகள், பெலாரஸ் போலாந்து நாட்டு எல்லைகளில் குவிந்துள்ளனர்.

பெலாரஸ் குடியேறிகள் பிரச்சினையை தூண்டுவதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் குற்றம்சாட்டினர். அதை பெலாரஸ் மறுத்துள்ளது. பெலாரஸுக்கு பதிலடி கொடுக்கும் விதத்தில், அதன் மீது புதிய தடைகளை விதிக்க திட்டமிடுவதாகச் செய்திகள் வெளியாயின.

தடைகள் விதிக்கப்பட்டால், எரிவாயு விநியோகத்தை நிறுத்திவிடுவோம் என பயமுறுத்தியுள்ளார் பெலாரஸ் நாட்டின் நீண்ட கால தலைவர் அலெக் ஸாண்டர் லுகஷென்கோ. ரஷ்யாவிலிருந்து பெரிய எரிவாயு குழாய் மூலம் பெலாரஸ் நாட்டின் வழியாக போலந்து உட்பட பல நாடுகளுக்கு எரிவாயு விநியோகிப்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# கேரளாவில் நோரா எனும் வைரஸ் பரவல் சுகாதாரத்துறை அமைச்சர் எச்சரிக்கை!



கேரளாவில் கொரோனா வைரஸ் பரவல் இன்னமும் கட்டுக்குள் வராத நிலையில் வயநாட்டில் 13 பேருக்கு நோரோ என்ற வைரஸ் (NoroVirus) பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது கேரள சுகாதாரத்துறையினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.


இந்தியா முழுவதும் பரவிய கொரோனா வைரஸ் பாதிப்பின் இரண்டாவது அலை பல மாநிலங்களிலும் கட்டுக்குள் வந்து இயல்பு நிலையை நோக்கி பயணித்துக்கொண்டி ருக்கும் நிலையில், கேரளாவில் மட்டும் இன்னும் பாதிப்பு குறைந்த பாடில்லை. தினசரி பாதிப்பு 7,000க்கு குறையாமல் இருக்கிறது. இந்தியாவின் அதிக கொரோனா பாதிப்பை சந்தித்து வரும் இந்திய மாநிலங்களுள் கேரளா முதல் இடத்தில் நீடிக்கிறது.

இதனிடையே கேரளாவின் வயநாடு மாவட்டத்தின் வைத்திரி அருகேயுள்ள பூக்கோடு எனும் கிராமத்தில் செயல் பட்டுவரும் கால்நடைக் கல்லூரி மாணவர்கள் 13 பேர் நோரோ வைரஸ் தாக்குதலுக்கு ஆளாகியமை தெரியவந்தது. இது விலங்குகள் மூலமாக மனிதர்களுக்குப் பரவும் வைரஸ் ஆகும். சுகாதார மற்ற உணவு மற்றும் நீர் காரணமாகவும் நோரோ வைரஸ் பரவுகிறது.

கேரள சுகாதாரத்துறை அமைச்சரான வீனா ஜார்ஜ் இது குறித்து செய்தியாளர்களுக்குத் தகவல் வழங்கிப் பேசுகையில், நோரோ வைரஸ் குறித்து அச்சப் படத்தேவையில்லை. அதே நேரத்தில் மக்கள் இது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். உரிய நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை மூலம் விரைவாகவே இந்த நோயை குணப்படுத்த முடியும் எனத் தெரிவித்திருக்கிறார். நோய்த்தடுப்பு குறித்த வழிகாட்டு நெறிமுறைகளையும் அவர் வெளியிட்டார்.

நோரோவைரஸ் இரைப்பைக் குடல் நோயை ஏற்படுத்துகிறது. வயிறு மற்றும் குடலின் உட்புறத்தின் வீக்கம், கடுமையான வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவை இதன் தாக்கங்களில் அடங்கும். நோரோ வைரஸ் வயதுவந்த ஆரோக்கியமானவர்களைப் பெரிதாக பாதிக்காது என்றும், ஆனால் இது இளம் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் இணை நோய்கள் உள்ளவர்களுக்கு தீவிரப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தொற்றுக்குள்ளானவர்களுடன் நெருங்கிய தொடர்பு மூலம் அல்லது அசுத்தமான மேற்பரப்புகளைத் தொடுவதன் மூலம் நோரோவைரஸ் எளிதில் பரவுகிறது என்றும் வயிற்றில் வைரஸ் பாதிப்பு உள்ள ஒருவரால் தயாரிக்கப்பட்ட அல்லது கையாளப்பட்ட உணவைச் சாப்பிடுவதன் மூலமும், பாதிக்கப்பட்ட நபரின் மலம் மற்றும் வாந்தி மூலமும் இந்த வைரஸ் பரவுகிறது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.



# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் அமெரிக்க நாடாளுமன்றக் குழு சந்திப்பு

அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஜான் கார்னின் தலைமையிலான அமெரிக்க நாடாளுமன்றக் குழு இந்தியாவிற்கு உத்தியோகப் பயணமாக வந்துள்ளது. இந்தக் குழுவில் செனட் சபை உறுப்பினர்கள் மைக்கேல் கிராப்போ, தாமஸ் டியுபர் வில்லே, மைக்கேல் லீ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டோனி கன்சாலேஸ், ஜான் கெவின் எலிசி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழு இன்று இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்தது. அப்போது மிகப்பெரிய சவால்களுக்கு இடையே கொரோனாவை இந்தியா சிறப்பாக சமாளித்தது என அமெரிக்கக் குழுவினர் பாராட்டியுள்ளனர்.

ஜனநாயக மாண்புகளை பகிர்ந்து கொள்வதன் வாயிலாக இந்தியா - அமெரிக்கா ஒருங்கிணைந்த உலகப் பாதுகாப்பு கூட்டாண்மையை வலுப்படுத்துவதில், அமெரிக்க நாடாளுமன்றம் ஆக்கப்பூர்வமாக பங்காற்றியதுடன் தொடர்ந்து ஆதரவை அளித்து வருவது குறித்து இந்தியப் பிரதமர் மோடி பாராட்டுத் தெரிவித்திருக்கிறார். இந்தச் சந்திப்பின்போது தெற்காசியா மற்றும் இந்தோ பசுபிக் பிராந்தியம் தொடர்பான விவாதமும் நடைபெற்றது.

உலக அமைதி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது, இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள், பயங்கரவாதம், பருவநிலை மாற்றம், முக்கிய தொழில்நுட்பங்களுக்கான நம்பகமான விநியோகச் சங்கிலிகள் போன்ற சமகால உலக விடயங்கள் குறித்து இந்தியப் பிரதமர் மோடி தமது கருத்தை பகிர்ந்துகொண்டார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# எல்லையில் சீனா கிராமம் அமைத்த விவகாரத்தில் மோடி பயந்துவிட்டாரென ராகுல் காந்தி விமர்சனம்

இந்திய எல்லைக்குள் சீனா பெரிய கிராமம் ஒன்றைக் கட்டமைத்ததாகக் கூறப்படும் விவகாரத்தை சுட்டிக்காட்டிய காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, பிரதமர் மோடி பயந்துவிட்டார் என விமர்சித்துள்ளார்.

சீனாவுக்கு எதிராக இந்திய மத்திய அரசிடம் வியூகம் எதுவும் இல்லாததால் தேசப்பாதுகாப்பு மன்னிக்க முடியாத அளவுக்கு சமரசத்துக்கு ஆளாகியிருப்பதாகவும் ராகுல் காந்தி தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஆண்டில் இருந்தே எல்லை விவகாரத்தில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உரசல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக லடாக்கில் இந்திய, சீன இராணுவத்தினருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் இந்திய இராணுவ வீரர்கள் 20 பேர் மரணமடைந்தனர் எனவும் சீனத் தரப்பிலும் உயிர்ப் பலிஏற்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதன் நீட்சியாக அருணாச்சலப் பிரதேசத்திலும் எல்லை விவகாரம் தொடர்பாக இரு நாட்டு இராணுவத்துக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் எல்லைக் கட்டுப்பாடுக் கோட்டுக்கு அருகே சமீபத்தில் இரு நாட்டு இராணுவத்துக்குமிடையே பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. இதனிடையே அருணாச்சலப் பிரதேச எல்லையருகே பெரிய கிராமம் ஒன்றைச் சீனா கட்டமைத்திருப்பதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது. இது தொடர்பான செயற்கைகோள் படம் ஒன்றும் வெளியானது.

இந்த விவகாரத்தில் சீனாவின் சட்டவிரோதச் செயலை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என இந்திய மத்திய வெளியுறவுத்துறை தெரிவித்தது. இந்திய இராணுவத் தலைமைத் தளபதி பிபின் ராவத், தம் எல்லைக்குள் சீனா கிராமம் எதையும் நிறுவவில்லை எனக் கூறியிருந்தார். இருப்பினும், சீனா கிராமத்தை



நிறுவியதா, இல்லையா? என்பது இதுவரை உறுதியாகவில்லை.

இந்த நிலையில் சீனாவுடனான எல்லை விவகாரத்தில் இந்திய வெளியுறவு அமைச்சகத்துக்கும் தலைமை இராணுவத் தளபதிக்குமிடையே வெவ்வேறு நிலைப்பாடு இருப்பதாக வெளியான செய்தியைச் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கும் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் எம்.பி.யுமான ராகுல் காந்தி, சீனாவுடனான எல்லை விவகாரத்தில் இந்திய மத்திய அரசிடம் எந்த வியூகமும் இல்லை என்பதால் நாட்டின் பாதுகாப்பில் சமசரம் ஏற்பட்டுள்ளது. மோடி பயந்து போயிருக்கிறார். என்னுடைய எண்ணமெல்லாம் நாட்டின் எல்லைகளைத் தங்களின் உயிரைப் பணயம் வைத்துப் பாதுகாக்கும் இராணுவ வீரர்களுடனே உள்ளது. மத்திய அரசு பொய் பேசிவருகிறது, என்று தெரிவித்திருக்கிறார்.

# வெள்ளத்தில் மிதக்கும் கன்னியாகுமரி கன மழையால் பரிதவிக்கும் மக்கள்

வடகிழக்கு பருவமழை மற்றும் வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் கனமழை பெய்து வருகிறது. குமரி மாவட்டத்தில் கடந்த 3 வாரத்திற்கும் மேலாக மழை பெய்து வரும் நிலையில், தற்போது மூன்றாவது நாளாக இன்றும் கனமழை நீடிக்கிறது. இதனால் நாகர்கோவில் நகரம் வெள்ளத்தில் மிதப்பதுபோல் காட்சியளித்தது.

கன்னியாகுமரியில் இன்று காலையிலும் கனமழை பெய்தது. இதனால் காந்தி மண்டபம், காமராஜர் மண்டபம் மற்றும் கடற்கரைச் சாலைகளனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன. மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களை வெள்ளம் சூழ்ந்தது. வீடுகளில் சிக்கித்தவித்த பொதுமக்களை தீயணைப்பு வீரர்கள் படகுகளில் சென்று மீட்டுள்ளனர். பல இடங்களில் இன்னமும் பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத அளவிற்கு மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தண்ணீர் சூழ்ந்த பகுதிகளில் உள்ள ஐம்பதிற்கும் மேற்பட்ட கிராமங்களில் பாதுகாப்பு கருதி மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. தொடர் மழையின் காரணமாக இன்று மூன்றாவது நாளாக பாடசாலைகள், கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

மழைவெள்ளம் புகுந்த பகுதிகளிலிருந்து வெளியேறிய பொதுமக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர். இந்தநிலையில், கன்னியாகுமரி மற்றும் நெல்லை மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

# கோரதீவுபற்று பிரதேச சபை உறுப்பினர்கள் சபை அமர்வில் பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேச சபை அமர்வின் போது பதாதைகளை ஏந்தியவாறு உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போரதீவுப்பற்றுப் பிரதேச சபையின் 45 ஆவது சபை அமர்வு வெல்லா வெளியில் அமைந்துள்ள பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தவிசாளர் யோ.ராஜனி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பல்வேறு பிரச்சனைகள் தொடர்பில் கலந்து கொண்ட உறுப்பினர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள தொலைத் தொடர்பு கோபுரங்கள், வீதி மின் விளக்குகள் பொருத்துதல், பழுகாமத்தில் அமைந்துள்ள திண்மக் கழிவகற்றும் இடம், பழுகாமத்தில் அமைந்துள்ள வண்ணான் குளத்தில் மீன் வளர்த்தல் நூலகங்களில் அமைந்துள்ள புத்தகங்கள் காணாமல் போனமை மற்றும் பழுதடைந்துள்ளமை, வெல்லா வெளி பொலிஸாரின் நடவடிக்கைகளில் திருப்தியின்மை, பிரதேச சபையின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள இராணுவ சோதனைச் சாவடி, காட்டு யானைகளின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல முன்வைக்கப்பட்டன இந்நிலையில் சபை அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை உறுப்பினர்கள் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

'பருவத்தில் பச்சை வழங்கா பயிரும் மண்ணாகும் பசளை வழங்கா அரசும்' 'வீணாகும் சீனி அரிசி சீமெந்து விலை அதிகரிப்பை நிறுத்து' 'அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பால் அவதியுறும் ஏழை விவசாயிகள் பசளை இன்றி பயிர் இல்லை விவசாயம் இன்றி நாடு இல்லை' 'அரசே அரசே உரத்தைக் கொடு' உள்ளிட்ட பல வாசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி கோஷங்களையும் சபை அமர்வின்போது எழுந்து நின்று ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி உறுப்பினர் சு.விக்னேஸ்வரன் அந்த ஆர்ப்பாட்டத்தைப் புறக்கணித்து கதிரையை விட்டு எழும்பாமல் அமர்ந்தபடியே இருந்தார்.

இறுதியில் மேற்படி பிரதேச சபையின் முன்னால் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அமைத்துள்ள சோதனைச் சாவடி மற்றும் வீதித் தடை ஆகியன பிரதேச சபைக்கு வரும் மக்களுக்கும் அதன் அருகில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் மற்றும் அதனருகில் அமைந்துள்ள ஆலயம் ஆகியவற்றுக்கும் பெரும் இடைஞ்சலாக இருந்து வருவதாகத் தெரிவித்து அதனை தவிசாளர் உள்ளிட்ட பலரும் பார்வையிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி அதிகாரத்தில் உள்ள போரதீவுப் பற்றுப் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எட்டு உறுப்பினர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி மூன்று உறுப் பினர்களையும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இரு உறுப்பினர்களையும் சுயேச்சைக்குழு இரு உறுப்பினர்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு உறுப்பினரையும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி ஒரு உறுப்பினரையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு உறுப்பினரையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பணத்தை எவ்வாறு செலவழிக்க முடியும் என்பதே வரவுசெலவுத் திட்டம்

**இரா.சாணக்கியன் கருத்து**



2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பணத்தை எவ்வாறு செலவழிக்க முடியும் என்பதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இதனை தெரிவித்தார். வெளிநாட்டு முதலீடுகள் மூலமே வருவாயை ஈட்டுவதற்கான ஒரே வழியாக இருக்கும் நிலையில் 2022 வரவு செலவுத் திட்டத்தில் இதற்கு தீர்வு காணப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் வெற் மற்றும் வரி விதிப்பு முறை மாற்றப்பட்டாலும், தற்போதைய பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அது போதுமானதாக இருக்காது என இரா.சாணக்கியன் கூறினார்.

கடனை அடைப்பதற்கும் கையிருப்பில் டொலர்களை வைத்திருப்பதற்குமான எந்த வித திட்டங்களும் இந்த வரவுசெலவு திட்டத்தில் இல்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற விபத்தில் மாணவர் உட்பட இருவர் காயம்

மட்டக்களப்பு பார் வீதி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவன் உட்பட மேலுமொருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு பார் வீதி பகுதியில் நேற்று பிற்பகல் மட்டக்களப்பு நகர் பகுதியில் இருந்து மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியில் இருந்து மட்டக்களப்பு நகரை நோக்கி பயணித்த கார் மோதியதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு வாகன போக்குவரத்து பிரிவு பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்களில் பயணித்த பாடசாலை மாணவன் உட்பட மாணவனின் உறவினர் ஒருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மட்டக் களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு வாகன போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# சர்வமத ஒன்றியத்தின் ஏற்பாட்டில் விசேட ஒருநாள் பயிற்சிப் பட்டறை



மட்டக்களப்பு மாவட்ட சர்வ மத ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கரித்தாஸ் எகெட் நிறுவனத்தின் அனுசரணையில் நிறுவன இயக்குநர் அருட்பணி ஏ.ஜேசுதாசன் அடிகளாரின் தலைமையில் மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஒருநாள் பயிற்சி பட்டறையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சர்வமதத் தலைவர்கள், மாவட்ட சர்வமத ஒன்றியத்தின் உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள் என சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக குறிப்பிட்டளவிலானோர் கலந்து கொண்டனர்.

மாவட்டத்தில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் பல நல்லிணக்க சமூக செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற மாவட்ட சர்வமத ஒன்றியம் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் பொதுமக்களுடன் நேரடியாக தொடர்பாடல்களை கொண்டுள்ள சமயத் தலைவர்கள், அரச அலுவல உத்தியோகத்தர்கள், சர்வமத ஒன்றிய உறுப்பினர்கள் எவ்வாறு மக்களிடையில் வன்முறைத் தீவிரவாதத்தைப் புரிந்துகொள்ள வைத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஒருநாள் செயல்முறை பயிற்சி பட்டறை முன்னெடுக்கப்பட்டது.

இந்த பயிற்சிப் பட்டறையில் வளவாளர்களாக தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி பெனிக்னஸ், மாவட்ட பல் சமய ஒன்றியத்தின் செயலாளர் அருட்பணி ராஜன் ரொஹான், காத்தான்குடி பிஸ்மி கல்வி நிறுவன தவிசாளர் எம்.பி. எம்.பிர்தவுஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# லங்கா பிறீமியர் லீக் தொடர் வீரர்கள் ஏலம்; இலங்கை கிரிக்கெட் சபை ஊடக அறிக்கை



லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரின் இரண்டாவது பருவகாலத்திற்கான வீரர்கள் ஏலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியினுடைய பிரபல சிரேஷ்ட வீரர்கள் சிலர் எந்த அணிகளினாலும் ஏலம் எடுக்கப்படாததனையடுத்து இலங்கை கிரிக்கெட் சபை அது தொடர்பிலான ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

எல்.பி.எல். தொடரின் வீரர்கள் ஏலத்தில் பல இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்ட போதும் தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்யுஸ், குசல் பெரேரா போன்ற வீரர்கள் அடங்கிய இலங்கை கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர்களின் தொகுதியொன்று எந்த அணிகளாலும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

அதனையடுத்து, இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேலஜெயவர்த்தன உட்படப் பலரும் இந்த வீரர்கள் ஏலத்தினை விமர்சித்திருந்தனர்.

தற்போது, இந்த வீரர்கள் ஏலம் குறித்து ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் சபை, வெளிப்படையான முறையில் வீரர்களின் ஏலம் பற்றி தொடரில் பங்கேற்கின்ற அணிகளின் உரிமையாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டதாக குறிப்பிட்டிருக்கின்றது. தொடரின் வீரர்களுக்கான ஏலத்தில் பங்கெடுத்திருக்கும் அணிகள் இலங்கை கிரிக்கெட் சபை வழங்கிய விதிமுறைகளுக்கு அமையவும், குறித்த அணிகளுக்கு வீரர்களை தெரிவு செய்வதற்கு காணப்படுகின்ற விருப்புரிமைக்கும் அமையவுமே தமது அணிகளுக்கான 20 வீரர்களையும் தெரிவு செய்திருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது.

வீரர்களுக்கான ஏலம் வெளிப்படையாக நடைபெற்றிருக்கின்றது என்பதனை மேலும் உறுதிப்படுத்தியிருந்த இலங்கைக் கிரிக்கெட் சபை, ஏலத்தில் இம்முறை தெரிவாகாத வீரர்களுக்கும் வாய்ப்பு வழங்கும் நோக்கில், உள்வாங்கும் வீரர்களின் மொத்த எண்ணிக்கையினை 20 இல் இருந்து 22 ஆக அதிகரிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டிருக்கின்றது.

## துடுப்பு மட்டை குத்தியதால் எலும்பு முறிவு இறுதிப்போட்டியைத் தவறவிடும் கொன்வே



கையில் ஏற்பட்ட எலும்புமுறிவு காரணமாக ரி20 உலகக் கிண்ண இறுதிப்போட்டி மற்றும் இந்திய சுற்றுப்பயணத்திலிருந்து நியூசிலாந்து வீரர் டெவோன் கொன்வே விலகியுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வரும் ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி நாளை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன. கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது அரையிறுதிப்போட்டியில் வெற்றியீட்டிய நியூசிலாந்து அணிக்காக 38 பந்துகளில் 46 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு உதவிய டெவோன் கொன்வே நாளைய இறுதிப்போட்டியில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அரையிறுதிப் போட்டியில் 46 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தபோது ஏற்பட்ட ஆத்திரத்தால் தனது கையில் இருந்த துடுப்பு மட்டையை டெவோன் கொன்வே ஓங்கிக் குத்தியிருந்தார். அப்போது துரதிஷ்டவசமாக அவரது வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட, மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அங்கு மேற் கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனையில் கையில் முறிவு ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இதையடுத்து ஆஸ்திரேலிய அணியுடன் நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டி மற்றும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்திய அணியுடனான தொடர் ஆகியவற்றில் இருந்து டெவோன் கொன்வே விலகுகிறார் என நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அவருக்குப் பதிலாக டிம் சீபெர்ட் இறுதிப் போட்டியில் விளையாடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட டெவோன் கொன்வே, அதில் இரட்டைச் சதமடித்து கவனத்தை ஈர்த்திருந்தார். நியூசிலாந்து அணியின் பிரதான விக்கெட் காப்பாளரான டொம் ப்ளொன் டெலுக்கு அடுத்ததாக அணியில் விக்கெட் காப்பாளராக செயற்படக் கூடியவராகவும் அவர் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று ஆர்ஜென்டீனா அணி தெரிவு

நேற்று நடைபெற்ற உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் உருகுவே அணியை வீழ்த்தி ஆர்ஜென்டீனா அணி வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் தொடக்கத்திலேயே ஆர்ஜென்டீனா அணியின் டி மரியா ஒரு கோல் அடித்தார். ஆட்டம் தொடங்கிய ஏழாவது நிமிடத்தில் அவர் அடித்த கோல் உதவியுடன் ஆர்ஜென்ரீனா அணி 1-0 என முன்னிலை பெற்றது

ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால் 1-0 என்ற கோல் கணக்கில் உருகுவே அணியை வீழ்த்தி ஆர்ஜென்டீனா அணி வெற்றி பெற்றது.

## மேற்கிந்தியத்தீவுகளுடனான பயிற்சிப்போட்டி அணித்தலைவராக சரித் அசலங்க நியமனம்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான நான்கு நாள்கள் கொண்ட பயிற்சிப்போட்டிக்கான, இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் பதினொருவர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணியின் தலைவராக, ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடி கவனமீர்த்த சரித் அசலங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

சரித் அசலங்கவுடன் தனஞ்ஜய டி சில்வா, பத்தும் நிஸங்க, சமிக்க கருணாரத்ன, மினோத் பானுக மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். இதில், டெஸ்ட் போட்டிகளில் கடந்த காலங்களில் சிறப்பாக விளையாடியிருந்த ஓசத பெர்னாண்டோ, ரொஷேன் சில்வா, லசித் எம்புல்தெனிய மற்றும் விஷ்வ பெர்னாண்டோ ஆகியோருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான பயிற்சிப்போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நாளைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் பதினொருவர் அணி விவரம் –

சரித் அசலங்க (தலைவர்), பதும் நிஸங்க, ஓசத பெர்னாண்டோ, தனஞ்ஜய டி சில்வா, ரொஷேன் சில்வா, மினோத் பானுக, சமிக்க கருணாரத்ன, அசித பெர்னாண்டோ, கமில் மிஷார, சமிக்க குணசேகர, சுமிந்த லக்ஷான், லக்ஷான் சங்கசன், ரமேஷ் மெண்டிஸ், லசிக் எம்பல்கெனிய, விஷ்வ பெர்னாண்டோ

# தோட்டத் தொழிலாளர்களும் ஒன்றுபட்டால் வெற்றி நிச்சயம்!

## முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ராஜாராம் அறைகூவல்

ஒருமித்த நோக்கில் ஓரணியில் திரண்டு அதிபர், ஆசிரியர்கள் போராடியதால் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துள்ளது. எனவே, மலையக பெருந் தோட்டத் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் கட்சி, அரசியல் பேதங்களை மறந்து, ஒன்றுபட வேண்டும். – என்று மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர்.ராஜாராம் அறைகூவல் விடுத்துள்ளார். ஹற்றனில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு சுமார் 24 வருடங்களாக இழுபறி நிலையில் இருந்து வந்தது. இந்நிலையில் அதிபர், ஆசிரியர்கள் சார் தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டன.

அதிபர், ஆசிரியர்கள் ஓரணியில் திரண்டனர். இலக்கை நோக்கி பயணிக்க ஒருமித்து குரல் எழுப்பினர். அடக்குமுறைகளை, அச்சுறுத்தல்களைத் தகர்த்தெறிந்து துணிகரமாகப் போராடினர். அதன் விளைவாக இன்று சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்திலிருந்து நாம் படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது ஒன்றுபட்டால் வெற்றி நிச்சயம் என்பதை உணர வேண்டும். எனவே, கட்சி, தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் மலையகப் பெருந் தோட்டத் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் ஒன்றுபட வேண்டும். ஊதிய உரிமைக்காகவும், தொழில் பாதுகாப்புக்காகவும், அடக்குமுறைகளுக்கு எதிராகவும் ஒன்றுபட்டு போராட வேண்டும். அப்போது தான் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை உள்ளது.




பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. ஆனால் ஊதிய உயர்வின் பலன் அவர்களுக்குக் கிட்டவில்லை. முன்னர் 25 நாள்கள் வேலை என்றால் தற்போது வாரம் 3 நாள்கள் என மாதம் 12 நாள்களே வேலை வழங்கப்படுகின்றது. அதாவது முன்னரைவிடவும் குறைந்த சம்பளமே கிடைக்கின்றது.

உரம் மற்றும் சீரற்ற காலநிலையால் விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இவ்விரு தரப்புகளுக்கும் பட்ஜட்டில் உரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். இதுவரையில் யோசனைகள் உள்வாங்கப்படாத பட்சத்தில் திருத்தத்தின் போது அவை உள்வாங்கப்பட வேண்டும். என்றார்.



# மக்களின் குறைபாடுகளை புரிந்து செயலாற்றுங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அரசுக்கு அறிவுரை

தங்களின் உத்தியோகபூர்வ இல்லங்களின் மின் கட்டணம் பற்றி, நீர் கட்டணம் மற்றும் பிற வசதிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முறைப்பாடு செய்தாலும் அவர்களின் முறைப்பாடுகளைக் கேட்பதற்கு ஆள்கள் இருந்தாலும் மக்களின் குறைகளைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புத்தளம் நாத்தாண்டிய பிரதேசத்துக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவல நிலையைக் கேட்டறிந்தார்.

பொருள்களின் விலை உயர்ந்துள்ளதாகவும், குழந்தைகளின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், முழு நாடும் ஒரு ஸ்தம்பித சூழ்நிலைக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதேவேளை கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் மக்கள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை தற்போது செயற்படுவதாகத் தெரியவில்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மந்தமாக முடிவுகளை எடுப்பதற்குப் பதிலாக விரைவாகவும் வினைத்திறனாகவும் தலையிட்டு பாதிக்கப்பட்ட மக்களை மீட்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் கூறினார்.

# நனோ நைதரசன் சேதன உரப் பாவனை; அறிமுகவிழா கிளிநொச்சியில் நடந்தது









நனோ நைதரசன் சேதன திரவ உர பாவனை தொடர்பான அறிமுக விழா நேற்று (வெள்ளிக்கிழமை) கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு நேற்று காலை 11 மணியளவில் கிளிநொச்சி வன்னுரிக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்றது. பரந்தன் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வன்னேரிக்குளம் கமக்காரர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு வன்னுரிக்குளம் முருகன் குஜூவில் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஐ.எப்.எப்.சி.ஓ நிறுவனத்தின் பிரதிநிதிகள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமையுடன், வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விசேட ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமான மேற்படி நிகழ்வு, பின்னர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது திரவ உரத்தின் பயன்பாட்டு முறைகள், நன்மைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஐ.எப்.எப்சி.ஓ நிறுவனத்தின் பிரதிநிதிகளால் தெளிவுபடுத்தப்பட்டது.

நிகழ்வில் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு அவர்களால் தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து திரவ உரத்தைப் பயன்படுத்தும் வகையில் உரம் விசிறுதல் மற்றும் கலக்கும் முறைகள் தொடர்பில் விவசாயிகளுக்கு செயல் முறையில் காண்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. ஒருவார கால விஜயம் மேற்கொண்டுள்ள இந்தக் குழுவினர் அறிமுக நிகழ்வான நேற்றைய முதல் நாள் நிகழ்வில் கலந்துகொண்டனர். தொடர்ந்து ஏனைய பிரதேசங்களுக்கு செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆரம்ப நிகவழ்வான நேற்றைய தினம் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் கிளிநொச்சியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2021இல் வெளியிடப்பெற்றது.